# 4. சங்ககாலம் - மன்னர்கள்

# (கி.மு. 300-கி.பி. 300)

சங்ககாலம் தமிழ் நாட்டின் வரலாற்றுக் காலமாகும் (Historic Period) இந்த காலத்தில் எழுத்துச் சான்றுகளும், இலக்கியங்களும் அதிகமாகக் கிடைக்கின்றன. இதன் காலம் கி.மு. 300 லிருந்து கி.பி. 300 வரையாகும். இந்த காலத்தை பற்றி அறிய கீழ்க்கண்ட கல்வெட்டக்கள் உதவிபுரிகின்றன.

1. **அசோகர் கல்வெட்டுகள்: (Asokar Rockedicta)**

அசோகரின் பதின்மூன்றாவது பாறைக் கல்வெட்டு தனது ஆட்சிக்கு உட்படாமல் "சேர" சோழ. பாண்டிய, கேரளபுத்திர: நாடுகள் இருந்தன என்று கூறுகிறது. அசோகரின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகும். இதன் மூலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே "தமிழர்கள் அரசு" இருந்தது என்று அறிய முடிகிறது.

2. **கலிங்க மன்னர் ஹதிகும்பா கல்வெட்டு**

கலிங்கமன்னர் "காரவேலன்" என்பவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு மன்னராகயிருந்தார். அவர் ஹதிகும்பா" கல்வெட்டை வெளியிட்டார் அந்த கல்வெட்டு நூற்றி பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் ஒரு கூட்டணி அரசு இருந்தது என்று குறிப்பிடுகிறது. இதனால் தமிழ் நாட்டில் கி.ம. மூன்றாம் நூற்றாண்டிலேயே அவர்கள் இருந்தன என்று அறிந்து கொள்கிறோம்.

இதைத் தவிர சங்க காலம் பற்றி அறிந்து கொள்ள பிரமிகல்வெட்டுக்களும், இலக்கியங்களும் உதவிபுரிகின்றன. இதன் மூலம் இந்த காலத்தில் ஆண்ட மன்னர்களின் வரலாற்றை நாம் அறியலாம்.

**சேர மன்னர்கள்**

1. **உதியஞ்சேரல்:**

உதியஞ்சேரல்ஈ சேரமன்னர்களின் முதல் மன்னர் ஆவார். இந்த மன்னர் "முதியர்" என்னும் பழங்குடிகளுக்கு உதவியாகப் போர் செய்து வெற்றி பெற்றார்.

2. **நெடுஞ்சேரலாதன்:**

நெடுஞ்சேரலாதன் சங்காகல சேர மன்னர்கள் வரிசையில் இரண்டாவது மன்னன் ஆவார். இவர் கடல் தீவில் வாழ்ந்த கடம்பர்களை வெற்றிபெற்றார். மேலும் இவர்யவனர்களைத் தோற்கடித்து அவர்களைக் கைது செய்தார். இவரைப் பற்றி "புலவர்" குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார்.

3. **பல்யானை செல்கெழு கட்டுவன்:**

பல்யானை செங்கெழுகுட்டுவன் மூன்றாவது சேரமன்னர் ஆவார். இவர் நெடுஞ்சேரலாதனின் தம்பியாவார். தன்னுடைய இளவயதில் பூழி நாட்டில் இருந்து "நாடு காவல்" செய்தார். ஆகவே இவர் "புழியார் கோ"என்றழைக்கப்பட்டார். இவர் பல சிறப்பான வெற்றிகளை அடைந்தார் அவைகளாவது:

1. 'உம்பற்காட்டின்' மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றார்.
2. 'அகப்பர்' கோட்டையைத் தகர்த்து வெற்றி பெற்றார்
3. இவர் பெரிய படை ஒன்றை வைத்திருந்தார்.

4. **களங்காய்கண்ணி நார்முடிச்சேரல்:**

களங்காய் கண்ணி நார்முடிச்சேரல், சேரர்களின் நான்காம் மன்னர் ஆவார். இவர் களங்காய்களை ஒரு நாரில் கட்டி முடி சூட்டிக் கொண்டதால், இவர் 'களங்காய்கண்ணி நார் முடிச் சேரல் என்றழைக்கப்படுகிறார்' இவர், நன்னன் என்ற சிற்றாசரை 'வாகைப்பறந் தலையில்' தோல்வியடையச் செய்தார். இவர், எவ்வி என்ற சிற்றரசருக்கு உதவியாக,

‘நெடுமிடல்’ என்ற பாண்டியத்தலைவனை வெற்றி பெற்றார். மேலும் இவர் ‘கொடுமிடல் என்ற மற்றொரு பாண்டிய மன்னரையும் வெற்றி பெற்றார்.’

**5. செங்குட்டுவன்:**

இவர் சங்ககால ஐந்தாம் சேரமன்னர் ஆவார். இவருடைய தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவார். இந்த மன்னர் மோகூரை ஆட்சி செய்த சிற்றரசர் பழையன் அறுகையைத் தாக்கி வென்றார். இவர் 35 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

2. மோகூர் அரசரின் நண்பர்களான பல சிற்றரசர்களை ‘குரலாம் பறந்தலை’ எனந் மிடத்தில் தோற்கடித்தார். இவர் சோழ மன்னர் கிள்ளி வளவனுகக்காக ‘நேரி வாயிலில்’ என்னும் இடத்தில் போரிட்டு வெற்றி பெற்றார். வியலூர், கொடுமூஷகூர், இடும்பில் போன்ற இடங்களில் போர் நடத்தி வெற்றி பெற்றார். கொங்கு நாட்டில் சோழ அரசனையும் பாண்டிய அரசனையும் வெற்றி கண்டார். இவர் ஒரு கடல் போரும் செய்தார். பின் தகடூர் போர் செய்தார். இவர் வேங்கடமலையின் வாழ்ந்த பல குலங்களை வென்றார். இவர் பத்தினி கண்ணகிக்கு சிலை செய்து கோயில்கட்டி வழிபாடு செய்தார்.

**6. ஆடு கோட்டுபாட்டுச் சேரலாதன்:**

இவர் சேரமன்னர்கள் வரிசையில் ஆறாவது ஆவார். இவருடைய தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவார். இவர் செய்த போர்களில் முக்கியமானது சுரந்தைப் போர் ஆகும். ஆடுகளைக் களவு செய்த மக்களிடமிருந்து திரும்பவும் ஆடுகளை மீட்டுக் கொண்டு வந்தார்.

**7. அந்துவன்சேரல்**

இம்மன்னர் ‘கரூரைத் தலைநகரமாக கொண்டு ஆண்டார்’ ஏணிச்சேரி மூடமோசியார் என்னும் புலவர் இவர் நண்பர் ஆவார்.

**8. செல்வக்கடுங்கோ வாழியாதன்:**

இவர் ஆரம்பத்தில் பூமி நாட்டை ஆண்டு வந்தார். பின்பு கரூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டார். பின்பு இவர் பல வெற்றிகளை அடைந்தார் வேள்விகள் பல செய்துள்ளார். இவரை பற்றி கபிலர் பாடியுள்ளார்.

**9. பெருஞ்சேரல் இரும்பொறை:**

இவரது தந்தை செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆவார். இவர் ‘தழுவுள’ மன்னரது கோட்டையைக் தாக்கி தீக்கிரையாக்கினார். கொல்லிமலை ஊரைத்தாக்கி வெற்றிபெற்றார். இவர் அதியமானின் தலைநகர் தகடூரைத் தாக்கினார். ஆகையால் இவர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறை என்றழைக்கப்பட்டார்.

**10. இளஞ்சேரல் இரும்பொறை:**

இவர் பச்சை மலைப்பகுதி விச்சிக்கோ என்பவரைத் தோற்கடித்தார். மேலும் பொதியை ஆண்ட சோழ மன்னர் கோப்பெருஞ்சோழனையும் இவர் தோற்கடித்தார்.

# கரிகால் சோழன்

கிள்ளி, வளவன், செம்பியன், சென்னி என்றெல்லாம் அழைக்கப்பட்ட சோழர்கள், உறையூர் (உறந்தை, கோழியூர் என்றும் அது குறிப்பிடப்படும் ஐயும் புகார் என்ற காவிரிப்பூம்பட்டித்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

சங்க காலச் சோழ மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவரான கரிகாற்சோழன் பற்றிய குறிப்புகளை பழமொழி சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, மூவருலா, முடத்தாமக்கண்ணியாரின் பொருநராற்றுப் படை, உருத்திரங்கண்ணனாரின் பட்டினப்பாலை மற்றும் அகநானூறு, புறநானூறு ஆகிய இலக்கியங்களிலிருந்து அறிகிறோம்.

**பெயர்க் காரணம்**

சோழ அரசர் உருவப்ப∴றேர் இளஞ்சேட் சென்னி இறந்ததும், கருவுற்றிருந்த அவரத மனைவி மழுந்தூர் வேண்மான் சிறை வைக்கப்பட்டார்.

**கரிகாலனின் சாதனைகள்**

கி.மு. 60 முதல் கி.மு. 20 வரை ஆட்சி செய்த கரிகாற் சோழன், காலத்தால் சேரன் செங்குட்டுவனுக்கு முந்தியவன் எனப்படுகிறது.

- சேரமன்னன் பெருஞ்சேரலாதன், பாண்டிய மன்னன் மற்றும் ஒன்பது வேளிரும் இணைந்த கூட்டுப் படையை தஞ்சாவூருக்கு அருகிலுள்ள வெண்ணி என்ற இடத்தில் கரிகாலன் வெற்றி கொண்டார்.
- தோற்ற வேளிர்கள் சேர்ந்து, மீண்டும் கரிகாலனை எதிர்த்தனர் அவர்களை வாகைப் பறந்தலை என்ற இடத்தில் கரிகாலன் வென்றார்.

- பின்னர் நாகப்பட்டினம் பகுதியில் வாழ்ந்த நாகர்கள், குறும்பர்கள், இருங்கோவேன் ஆகியோழர வென்று காடுகளை அழித்து கரிகாலன் நாடாக்கினான் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.
- வட இந்தியா சென்று பல அரசர்களை சென்று, இமயமலைக்குச் சென்று அங்கு புலிச் சின்னத்தைப் பொறத்தார்.
- காவிரிக்குப் கரைகட்டி கல்லணை கட்டியது. காவிரிப் பூம்பட்டினம் என்ற தலைநகரை உருவாக்கியது, நெறி பிறழாமல் நீதி வழங்கியது (பழமொழி என்ற நூலின் சான்றுபடி), புலவர்களை பாராட்டியது ஆகியனவும் கரிகாலனின் சாதனைகள்.

**சங்க காலப் பாண்டியர்கள்**

உலக வரலாற்றில் மிகப் பழம் பெரும் வம்சத்தினர் பாண்டியர்களே எனலாம். இராமாயணமும், மகாபாரதமும் பாண்டிய மன்னர்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. கௌடில்யரும், மெகஸ்தனிசும் அவர்களைப் பற்றிக் கூறுகிறார்கள். அசோகரின் கல்வெட்டுக்களும் அவர்களைப் பற்றி அறிய உதவுகின்றன. பாண்டியர்கள் முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த பெருமையினையும் பெற்றவர்கள் ஆவர்.

**ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்**

முந்திய காலப் பாண்டிய மன்னர்களிடையே மிக முக்கியமானவன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஆவான். அவனது சிறப்புப் பட்டத்திலிருந்து அவன் ஒர் ஆரியப் படையை முறியடித்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. எனினும் அவனது வெற்றி பற்றி விவரங்கள் இல்லை. அவ் கல்வி பற்றிப் பாடியுள்ள செய்யுள் அவனது புலமைக்கு சான்றாக விளங்குகிறது. சிலப்பதிகாரத்தின் மூலம், அவசரத்தில் கோவலனைக் கள்வன் என எண்ணித் தலையை வெட்ட உத்தரவிட்ட மன்னன் இவராகத்தானிருக்க வேண்டும் என அறியப்படுகிறது. கையிற் சிலம்பொடும், கண்களில் நீரோடும் வந்த கண்ணகி தன் கணவன் மாசற்றவன் என்பதை

மெய்பித்ததும், மனம் வருந்தி உயிர் துறந்தான். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்கு, வெற்றிவேற் செழியன் எனும் சகோதரன் இருந்தான். அண்ணணின் மறைவை அறிந்த இளவல் மதுரைக்கு விரைந்து அரியனை ஏறினான். பின்னர் கண்ணகிக்குப் பெருமை சேர்க்க விழா எடுத்தான்.

**தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்**

கடைச் சங்க காலப் பாண்டிய அரசர்களுள் குறிப்பிடத்தகுந்த இடத்தை வகிப்பவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். பத்துப்பாட்டிலுள்ள மதுரைக் காஞ்சியம், நெடுநல்வாடையும் இம்மன்னனை பாட்டுபடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டவை. இரண்டு சங்க இலக்கியங்களால் பாடப்பட்ட பெருமை இவனுக்குத் தவிர வேறு எந்த பாண்டிய மன்னருக்கும் இல்லை. புறநானூறும், ராஜசிம்மனின் சின்னமனூர் செப்பேடும் இவனைப் பற்றிய செய்திகளைத் தரும் ஏனைய சான்றுகளாகும். கி.பி. 216-வாக்கில் இவன் பாண்டிய நாட்டை ஆண்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இளம் வயதிலேயே அரியனை ஏறிய இவளை எளிதில் தோற்கடிந்த விடலாம் என எதிரிகள் மனக்கோட்டை கட்டினர் சோழ அரசன் ராயசூயம் வேப்ப பெருநாற்கிள்ளி சோ அரசன் மாந்தரசேரல் இரும் பொறை, நிதியன், எழினி எருமையூரான், இருங்கோவேண்மாள், பொருநன் ஆகிய வேளிர் குலக் சிற்றரசர்களும் ஒன்று சேர்ந்து பாண்டியன் மீது படையெடுத்தனர் இவன் வயதில் சிறியோன் என்ற எண்ணமே இவர்களைகப் போருக்குத் தூண்டியதென புறநூனூறு கூறுகிறது.

இப்போர் தலையாலங்கானம் என்னுமிடத்தில் நடைபெற்றது எதிரிகள் அனைவரும் நெடுஞ்செழியனால் தோற்கடிக்கப்பட்டனர். தோற்றோடியவர்களை நெடுஞ்செழியன் அவர்களது தலைநகர் வரை விரட்டிக் சென்று கொன்றால் நெடுஞ்செழியன் என்று புலவர் இடைக்குன்றூக்கிழார் புறநானூரில் குறிப்பிட்டள்ளார். சின்னமனூர்ச் செப்பேடும் இவ்வெற்றியைப் பெரிதும் பாராட்டுகிறது.

வெற்றி வீரனாய்த் திகழ்ந்த நெடுஞ்செழியன் கற்றோரைப் போற்றுக் மாண்பினைப் பெற்றிருந்தான். மாங்குடி மருதனார் தலைமையில் புலவர் குழாம் ஒன்று இவனது அவையை அலங்கரித்து. மதுரைக் காஞ்சியை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார். கடல் கடந்த வாணியத்தின் மீது இவன் கொண்ட ஆர்வத்தால் இவன் காலத்தின் கொற்கை மிக முக்கிய வாணிகத் துறைமுகமாக வளர்ந்தது.

**பிற மன்னர்கள்**

கருங்கை ஒல்வாள் பெரும் பேயர் வழுதி, நல்வழுதி மாறன் வழுதி, பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி போன்ற பாண்டிய மன்னர்களின் பெயர்களை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. சங்க காலப் பாண்டியர்களிடையே கடைசி மன்னன் கணப்பேர் கடந்த உக்கிரப்பெவழுதி என்பவன் ஆவான். அவன் ஒரு புலவனாகவும், புரவலனாகவு் திகழ்ந்தான். வேங்கை மார்பன் என்ப்பட்ட கணப்பேர்எயிலின் மன்னனை அவன் வென்றான். இவ்விடம் தற்போது காளையார்கோயில் என அழைக்கப்படுகிறது. மூன்றாவது சங்கத்தைச் காத்த கடைசிப் பாண்டியன் இவன் என இறையனார் அகப்பொருள் குறிப்பிடுகிறது.

சேரர், சோழர், பாண்டியன் தவிரப் பல சிற்றரசர்கள் இருந்தனர். பாரி, காரி, ஓரி, பேகன், அதியமான் போன்றவர்கள் அவர்களிடையே குறிப்பிடத்தக்கவர்கள். மூவேந்தர்களும் தனித்தனியே கொடிகளும், சின்னங்களும் பெற்றிருந்தனர். சேரனுக்கு வில்லும், சோழனுக்கு புலியும், பாண்டியனுக்கு மீனும் சின்னங்களாக விளங்கின. மூவேந்தர்களும் மக்களின் நலனுக்காக ஆணடார்கள், முச்சங்கங்களை கட்டிக் காத்தமையால் பாண்டியர்கள் தனிச் சிறப்புப் பெறுகின்றனர்.

**சங்க காலக் குறுநில மன்னர்கள்**

சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தவிர, 150க்கும் மேற்பட்ட குறுநில மன்னர்களும் தமிழகத்தின் பல பகுதிகளை ஆட்சி செய்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

- பறம்பு மரையை ஆண்ட, முல்லைக்கும் தேர் தந்த பாரி (கடையெழு வள்ளல்களுள் சிறப்பானவர்)
- மலாடுப் பகுதியை ஆண்ட திருமுடிக்காரி
- கொல்லி மலைப் பகுதியை ஆண்ட வல்வில் ஓரி
- கண்டீரப் பகுதியை ஆட்சி செய்த கோப்பெருநள்ளி
- பழநி மலைப் பகுதியை ஆட்சி செய்ததுடன், மயிலுக்கு போர்வை தந்த பேகன்
- நீண்டநாள் வாழ தான் பெற்ற நெல்லிக் கனியை, ஔவையார்க்கு அளித்த தகடூர் அதியமான் நெடுமான் அஞ்சி
- கோவலூர் மலையமான்
- மாமல்லபுரத்தைச் சுற்றிய பகுதிகளை ஆண்ட நல்லியக் கோடன்
- பாண்டியன் மாறன், அழிசி, ஏனாதி திருக்கள்ளி

வீரமும், தீரமும் மிக்க சங்க கால மன்னர்கள், சமயப்பற்று கொண்டிருந்ததுடன் புலவர்களையும் ஆதரித்தனர். இதனால் இலக்கியங்களில் இடம் பெற்ற அவர்களது சாதனைகள் நாம் நினைவில் கொள்ள வேண்டியவை.